**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 2/2024**

**வா.சா. 1 – ஏசுராஜன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 15.10.2025.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 8 பேர் பெண்கள் 4 மற்றும் என்னுடன் சேர்த்து ஆண்கள் 4 பேர். 1ம் பிரதிவாதியான மரிய ஆரோக்கியம் எனது தாயார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை யார் பராமரித்து வருகிறார் என்றால் நான் தான். எனது தந்தை 14.02.2014 அன்று உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி உயிலான வா.சா.ஆ.1ல் வழக்கு பட்டிகை சொத்து குறித்து எனது தந்தை யாருக்கு எழுதி வைத்தார் என்றால் வீட்டை எனக்கும் பணக்குடியில் உள்ள விவசாய நிலங்களை மற்ற சகோதரர்களுக்கு எழுதி வைத்தார். எனது தந்தை எந்த ஆண்டு காலஞ்சென்றார் என்றால் 2019ம் ஆண்டு. எனது தந்தை இறப்பதற்கு முன்பு எத்தனை நாட்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் 2018ம் ஆண்டில் இருந்தே. நான் எத்தனை சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் இரண்டு சகோதரிகளுக்கு. எனது பெற்றோர்களின் பராமரிப்பு செலவை யார் செய்து வந்தார் என்றால் நான் தான்.

22.11.2019 அன்று ஏதேனும் உயில் எனது தந்தை எழுதி வைத்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 உயில் யார் முன்னிலையில் எந்த சாட்சி முன்னிலையில் அல்லது மருத்துவமனையில் மருத்துவரின் முன்பாகவா அல்லது வழக்கறிஞர் முன்பாக எழுதப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 உயில் இருந்தால் அது செல்லுபடியாகுமா என்றால் செல்லுபடியாகாது. வழக்குபட்டிகை சொத்தில் எத்தனை

வருடமாக வசித்து வருகிறேன் என்றால் பிறந்ததில் இருந்தே. எனது தாயாரை நான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் போலியானது உண்மை தன்மையற்றது அவ்வாறு ஒரு உயில் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**